பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
11 01 2026 SUNDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சோம்நாத் ஆலயம், தெய்வீகத்தின் ஒளிவிளக்காக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- முன்னாள் பிரதமர் பாரத்ரத்னா லால்பகதூர் சாஸ்திரியின் நினைவு தினத்தை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மரியாதை செலுத்தியுள்ளார்.
- சைக்கிள் பயிற்சி இளைஞர்களுக்கு தலைமைப் பண்பை பயிற்றுவிப்பதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழ் மொழிக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் பெருமை சேர்த்து வருவதாக பிஜேபி செயல் தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.
- வெனிசுலாவில் உள்ள அமெரிக்கர்கள், அந்நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

குஜராத்தில் உள்ள சோம்நாத் ஆலயத்தை பாதுகாக்கும் பணியின்போது, இன்னுயிர் ஈந்தவர்களை நினைவுகூரும் Shaurya யாத்திரையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்து கொண்டார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இதேநாளில், சோம்நாத் ஆலயம் மீது, தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், நாடு சுதந்திரம் அடைந்த பின், 1951ஆம் ஆண்டு, இக்கோவில் சீரமைக்கப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவை குறைக்கும் வகையில் இந்த யாத்திரை நடைபெற்றது.

முன்னதாக, சோம்நாத் ஆலயத்தில் வழிபாடு செய்த பிரதமர், அங்கு கலைநிகழ்ச்சிகளில் ஈடுபட்ட கலைஞர்கள் மற்றும் ரிஷிகுமாரர்களுடன் கலந்துரையாடினார்.

இதனிடையே, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சோம்நாத் ஆலயம், தெய்வீகத்தின் ஒளிவிளக்காக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

இக்கோவில் பல தலைமுறைகளாக மக்களுக்கு வழிகாட்டி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் ஒரு பகுதியாக, நேற்று நடைபெற்ற ஓங்கார மந்திர முழக்கம் மற்றும் ட்ரோன் காட்சிகளையும் பிரதமர் தமது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

முன்னாள் பிரதமர் பாரத்ரத்னா லால்பகதூர் சாஸ்திரியின் நினைவு தினத்தை ஒட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா மரியாதை செலுத்தியுள்ளார்.

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாடு நெருக்கடியான காலகட்டத்தில் இருந்தபோது, சாஸ்திரியின் "ஜெய் ஜவான் ஜெய் கிஸான்" முழக்கம், நல்லிணக்கம், சுயசார்பு மற்றும் பாதுகாப்பிற்கு வலுசேர்த்ததாக குறிப்பிட்டுள்ளார்.*

*சாதாரண குடும்ப சூழலில் பிறந்த அவர், தமது உறுதிப்பாடு மற்றும் வலிமையான தலைமைப் பண்பு காரணமாக, 1965ஆம் ஆண்டு நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போரில், இந்தியா வெற்றிபெற்றதையும் அமைச்சர் நினைவுகூர்ந்துள்ளார்.*

*அவரது எளிமையான வாழ்க்கை சமூக சேவையில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் உந்துசக்தியாக இருக்கும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

>>>>>><<<<<<

*சைக்கிள் பயிற்சி சமநிலை மற்றும் தலைமைப் பண்பை பயிற்றுவிப்பதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று ஞாயிறு தோறும் சைக்கிள் இயக்கத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், சைக்கிள் ஓட்டுவதன் மூலம் இளைஞர்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய அம்சங்களை கற்றுக் கொள்ள முடியும் என்று கூறினார்.*

*ஆரோக்கியமான, கட்டுக்கோப்பான உடல்நலத்தைக் கொண்ட இளைஞர்களால், நாட்டின் வளர்ச்சிக்கு உதவ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*ஞாயிறு தோறும் சைக்கிள் இயக்கம் தொடங்கப்பட்ட போது, நாட்டில் உள்ள 240 இடங்களில் மட்டுமே சைக்கிள் பயிற்சி மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்போது 15 ஆயிரத்திற்கும் அதிகமான இடங்களில் நடத்தப்படுவதையும் டாக்டர் மன்சுக் மாண்டவியா சுட்டிக்காட்டினார்.*

>>>>>><<<<<<

*பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களிடையே தேர்வு குறித்த அச்சத்தை போக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துரையாடும் Pariksha Pe Charcha நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கான பெயர் பதிவு இன்றுடன் நிறைவடைகிறது.*

*கடந்த ஆண்டு, 3 கோடியே 56 லட்சம் பேர் பதிவு செய்த நிலையில், இந்த ஆண்டு இதுவரை, 4 கோடியே 30 லட்சத்திற்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ளனர்.*

*இவர்களில் 4 கோடியே 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும், 24 லட்சத்திற்கும் அதிகமாக ஆசிரியர்களும், 5 லட்சத்து 73 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெற்றோர்களும் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

>>>>>><<<<<<

மியான்மர் நாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி, அழைத்துச் செல்லப்பட்டு, இணைய மோசடியில் ஈடுபடுத்தப்பட்ட 27 இந்தியர்கள் மீட்கப்பட்டு, தாயகம் அழைத்து வரப்பட்டனர்.

நேற்று புதுதில்லி வந்தடைந்த இவர்கள், பின்னர் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமிழ் மொழிக்கும், தமிழ் கலாச்சாரத்திற்கும் பெருமை சேர்த்து வருவதாக பிஜேபி செயல் தலைவர் திரு. நிதின் நபின் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் கோவையில் நடைபெற்ற நம்ம ஊரு மோடி பொங்கல் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், காசி தமிழ்ச் சங்கமம் மூலம், காசிக்கும் - தமிழகத்திற்கும் இடையேயான கலாச்சார தொடர்பு வலுப்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

விவசாயத்தைப் போற்றும் பொங்கல் விழா, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் கொண்டாடப்பட்டாலும், அது தேசிய ஒருமைப்பாட்டையே வலியுறுத்துவதாவும் அவர் குறிப்பிட்டார்.

பொங்கல் விழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற உறியடி நிகழ்ச்சியிலும் திரு. நிதின் நபின் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பெயர் சேர்ப்பில், முறைகேட்டில் ஈடுபட்ட அதிகரிகள் மீது நடவடிக்கை எடுப்பதில் தாமதம் காட்டப்படுவதற்கு தேர்தல் ஆணையம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வாயிலாக, தெற்கு 24 Parganas மற்றும் கிழக்கு மித்னாப்பூர் மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு தேர்தல் ஆணையம் நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளது.

இவ்விரு மாவட்டங்களிலும் முறைகேட்டில் ஈடுபட்ட 4 தேர்தல் அதிகாரிகள் மீது உடனடியாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யுமாறும் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீர் எல்லையில் நடைபெறும் ஊடுருவல் மற்றும் கடத்தலை தடுக்கும் வகையில், எல்லைக் கட்டுப்பாடு கோடு மற்றும் சர்வதேச எல்லைப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கஷ்மீரின் Gurez, Uri, Karnah மற்றும் Tangdhar பகுதிகளிலும், ஜம்மு பகுதியிலும் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சர்வதேச எல்லைப்பகுதியில் மத்திய பாதுகாப்புப் படையினர் தொடர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருப்பதுடன், டிஜிட்டல் கண்காணிப்பு உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவிக்கிறார்.

இதனிடையே, சம்பா மாவட்டத்தை ஒட்டிய எல்லைப்பகுதியில், பாகிஸ்தான் ட்ரோன் மூலம் வீசப்பட்ட துப்பாக்கிகள், தோட்டாக்கள், கையெறி குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களை பாதுகாப்பு படையினர் கைப்பற்றியுள்ளனர்.

எல்லைக்கட்டுப்பாடு கோடு அருகே உள்ள Akhnoor பகுதியில் உளவுப் பணிக்காக அனுப்பப்பட்ட புறா ஒன்றையும் பாதுகாப்புப் படையினர் பிடித்துள்ளனர்.

கால்களில் சில குறியீடுகளுடன் அனுப்பப்பட்ட இந்த புறாவின் சிறகுகளிலும் சந்தேகத்திற்கு இடமான முத்திரைகள் இருந்ததை அடுத்து, பாதுகாப்பு படையினர் தொடர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

>>>>>><<<<<<

வெனிசுலாவில் உள்ள அமெரிக்கர்கள், அந்நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெனிசுலாவில் சர்வதேச விமான சேவைகள் மீண்டும் தொடங்கியிருக்கும் நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

வெனிசுலாவில் ஆயுதம் ஏந்திய குழுக்கள், அமெரிக்கர்களை குறிவைத்து தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அது கூறியுள்ளது.

>>>>>><<<<<<

எக்ஸ் சமூகவலைப் பதிவுகளில் ஆபாச பதிவுகள் இடம்பெறுவதை அனுமதிக்க மாட்டோம் என்று அந்த நிறுவனம், மத்திய அரசிடம் உறுதி அளித்துள்ளது.

ஏற்கனவே வெளியான சில பகுதிகளில். இடம்பெற்ற காட்சிகளை முறைப்படுத்தாதது தங்களது தவறு என்றும் அந்த நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

தாங்கள் மேற்கொண்ட தணிக்கையின் அப்படையில், 600க்கும் அதிகமான கணக்குகள் நீக்கப்பட்டிருப்பதாகவும், 3 ஆயிரத்து 500 பதிவுகள் தடை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருங்காலத்தில் இந்தியாவின் சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப, பதிவுகள் இடம்பெறுவது உறுதி செய்யப்படும் என்றும் எக்ஸ் சமூகவலைதள நிறுவனம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மியான்மர் நாட்டின் பொதுத்தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு, 100 நகரங்களில் இன்று நடைபெறுகிறது.

இப்பகுதிகளில் அண்மைக்காலமாக அரசுப் படைகளுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையே மோதல்கள் அதிகரித்து வந்த நிலையில், தேர்தலை ஒட்டி, பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்நாட்டின் மொத்தமுள்ள 330 நகரங்களில் முதற்கட்டமாக 102 நகரங்களில், கடந்த மாதம் 28ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது.

இறுதிக்கட்ட வாக்குப்பதிவு இம்மாதம் 25ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், கடுமையான மோதல் நடைபெற்று வரும் 65 நகரங்களில் தேர்தல் நடைபெறாது என்று மியான்மர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா, பிரேசிலின் முன்னாள் கால்பந்து வீரர் கில்பெர்டோ டி சில்வாவுடன் இணைந்து, 2026ஆம் ஆண்டிற்கான FIFA கால்பந்து உலகக் கோப்பையை புதுதில்லியில் அறிமுகம் செய்தனர்.

குவஹாத்தி உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இந்த கோப்பை எடுத்துச் செல்லப்படுகிறது.

உலக கோப்பை கால்பந்து போட்டிகள், ஜூன் மாதம் 11ஆம் தேதி தொடங்கவிருக்கும் நிலையில், 48 அணிகள் இதில் பங்கேற்கின்றன.

>>>>>><<<<<<

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

வதோதராவில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<